நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்
திரு. சா. வரதராஜன், பி.ஏ., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.

**பிரிவு 313(1)(ஆ) CrPC –இன் படியான விசாரணை**

எதிரிகள் :

1. லட்சுமணபிரபு
2. மகாலட்சுமி
3. வேல்தாய்
4. கமலா

| | | | |
|---|---|---|---|
| 1 | கேள்வி | : | அ.சா.1 –மாரியப்பன், அவருடைய புகாரில் 18.09.2021ம் தேதி 20.30 மணியளவில் அ.சா.1ன் வீட்டு முன்பு வைத்து எதிரிகளாகிய நீங்கள் அ.சா.1ஐ தகாத வார்த்தைகளால் பேசி கொலைமிரட்டல் விடுத்ததாகவும், 1வது எதிரியாகிய நீர் அ.சா.1ஐ இரும்பு பைப்பால் அ.சா.1ன் மூக்கில் அடித்து எலும்பு முறிவு ஏற்படுத்தியதாகவும், சம்பவம் தொடர்பாக அ.சா.1 புகார் மனு அளித்தாகவும் கூறியுள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1வது எதிரி: பொய் வழக்கு<br>2 வது எதிரி: பொய் வழக்கு<br>3 வது எதிரி: பொய் வழக்கு<br>4 வது எதிரி: பொய் வழக்கு |
| 2 | கேள்வி | : | அ.சா.2–திரு.லட்சுமணக்குமார் சிறப்பு சார்பு ஆய்வாளர் அவருடைய சாட்சியத்தில் 26.09.20213 ம் தேதி காலை 08.00 மணியளவில் இருக்கன்குடி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திரு.சசிக்குமார் நிலைய பொறுப்பில் இருந்தபோது மாரியப்பன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை(அ.சா.ஆ.3) பெற்று அதன் தன்மைகேற்ப இருக்கன்குடி காவல் நிலைய குற்ற எண் 116/2021 பிரிவுகள் 294 (b), 324, 506(2) இ.த.ச –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.4) பதிவு செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1வது எதிரி: பொய் வழக்கு<br>2 வது எதிரி: பொய் வழக்கு<br>3 வது எதிரி: பொய் வழக்கு<br>4 வது எதிரி: பொய் வழக்கு |
| 3 | கேள்வி | : | அ.சா.2–மேலும் அவருடைய சாட்சியத்தில், வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் திரு.சசிக்குமார் 26.09.2021ம் தேதி 09.15 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் மதன்குமார் மற்றும் ராஜன் என்ற சண்முகவடிவேல்ராஜ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர்(அ.சா.ஆ.5) மற்றும் வரைபடம்(அ.சா.ஆ.6) தயார் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1வது எதிரி: தெரியாது<br>2 வது எதிரி: தெரியாது<br>3 வது எதிரி: தெரியாது<br>4 வது எதிரி: தெரியாது |
| 4 | கேள்வி | : | அ.சா.2– மேலும் அவருடைய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் திரு.சசிக்குமார் சாட்சிகள் மாரியப்பன், மூக்கம்மாள், காளீஸ்வரி, காளியப்பன், சண்முகத்தாய், மதன்குமார் மற்றும் ராஜன் என்ற சண்முகவடிவேல்ராஜ் ஆகியோர்களை |

| | | | |
|---|---|---|---|
| | | | விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி: தெரியாது<br>2 வது எதிரி: தெரியாது<br>3 வது எதிரி: தெரியாது<br>4 வது எதிரி: தெரியாது |
| 5 | கேள்வி | : | அ.சா.2– மேலும் அவருடைய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் திரு.சசிக்குமார் சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரிகளை தேடி வந்த நிலையில் 26.09.2021ம் தேதி 12.45 மணியளவில் இவ்வழக்கின் 1வது எதிரி இலட்சுமணபிரபு ஆகிய உங்களை அய்யம்பட்டி பேருந்து நிறுத்தத்தில் வைத்து கைது செய்தபோது எதிரியாகிய நீங்கள் எவ்வித அச்சுறுத்தலும், வலுக்கட்டாயமோ இல்லாமல் தானே முன்வந்து வழக்கு குற்றத்தை ஒப்புக்கொண்டு சாட்சிகள் மலையப்பன் மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் (அ.சா.ஆ.7) அளித்துள்ளதாகவும், சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி: பொய் வழக்கு |
| 6 | கேள்வி | : | அ.சா.2 மேலும் அவருடய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் திரு.சசிக்குமார் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் எதிரிகளாகிய உங்களிடமிருந்து சுமார் 55 செ.மீ நீளமுள்ள இரும்பு பைப் ஒன்றை போலீசார் அத்தாட்சி(அ.சா.ஆ.8) தயார் செய்து கைப்பற்றியுள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி: பொய் வழக்கு |
| 7 | கேள்வி | : | அ.சா.2 மேலும் அவருடைய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் திரு.சசிக்குமார் கைது செய்த எதிரி மற்றும் கைப்பற்றி வழக்கு சொத்துடன் நிலையம் வந்து நிலைய ஆவணங்களில் பதிவு செய்து எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளதாகவும், கைப்பற்றிய வழக்கு சொத்தான 55 செ.மீ நீளம்கொண்ட இரும்பு பைப்பை படிவம் –91(அ.சா.ஆ.9) மூலமாக நீதிமன்ற அனுப்பி வைத்துள்ளதாகவும்,சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி: பொய் வழக்கு |
| 8 | கேள்வி | : | அ.சா.2 மேலும் அவருடைய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் திரு.சசிக்குமார் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான மலையப்பன் மற்றும் ரமேஷ் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், அ.சா.1க்கு முதலுதவி சிகிச்சையளித்த சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திவ்யா மற்றும் காயம்பட்ட அ.சா.1க்கு மேல்சிகிச்சையளித்து கொடுங்காயம் என்று சான்று வழங்கிய விருதுநகர் அரசு மருத்துவமனை மருத்துவர் அரவிந்த்பாபு என்பவரை விசாரணை செய்து அவரிடமிருந்து காயச்சான்று (அ.சா.ஆ.10 மற்றும் அ.சா.ஆ.11) பெற்று அவருடைய வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி: தெரியாது<br>2 வது எதிரி: தெரியாது |

| | | | |
|---|---|---|---|
| | | | 3 வது எதிரி: தெரியாது<br>4 வது எதிரி: தெரியாது |
| 9 | கேள்வி | : | அ.சா.2 மேலும் அவருடைய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் திரு.சசிக்குமார் இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 கஙகு மருத்தவர் வழங்கிய காயச்சான்றில் காயத்தின் தன்மை கொடுங்காயம் என்று குறிப்பிடப்பட்டிருந்தால் இவ்வாழக்கின் சட்டப்பிரிவான பிரிவுகள் 294 (b), 324, 506(2) இ.த.ச விலிருந்து, பிரிவுகள் 294(b), 326, 506(2) இ.த.ச ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை(அ.சா.ஆ.12) தயார் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி: தெரியாது<br>2 வது எதிரி: தெரியாது<br>3 வது எதிரி: தெரியாது<br>4 வது எதிரி: தெரியாது |
| 10 | கேள்வி | : | அ.சா.2 அவருடைய சாட்சியத்தில் தனது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் குற்ற சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரிகள் மீது பிரிவுகள் 294 (b), 326, 506(2) இ.த.ச –ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | 1 வது எதிரி: பொய் வழக்கு<br>2 வது எதிரி: பொய் வழக்கு<br>3 வது எதிரி: பொய் வழக்கு<br>4 வது எதிரி: பொய் வழக்கு |
| 11 | கேள்வி | : | வழக்கு பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்? |
| | பதில் | : | 1 வது எதிரி: பொய் வழக்கு<br>2 வது எதிரி: பொய் வழக்கு<br>3 வது எதிரி: பொய் வழக்கு<br>4 வது எதிரி: பொய் வழக்கு |
| 12 | கேள்வி | : | உங்கள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டா? |
| | பதில் | : | 1 வது எதிரி: இல்லை<br>2 வது எதிரி: இல்லை<br>3 வது எதிரி: இல்லை<br>4 வது எதிரி: இல்லை |

கேள்விகள் என்னால் நேரடியாக எதிரியிடம் கேட்கப்பட்டு, அவர் கூறிய பதில் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர், எண்.2, சாத்தூர்